உ

கடவுள் துணை.

தென்னிந்தியா ரெயில்வே

என்னும்

கர்னாடகப்புகைவண்டியின் சிந்து.

இஃது,

சிதம்பரம்.

நடராஜசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களால்

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1915

நெ. 13. நம்புலையர் தெருவு,—மதருஸ்.

உ

கடவுள் துணை.

தென்னிந்தியா ரெயில்வே

என்னும்

கர்னாடகப் புகைவண்டியின்சிந்து.

——:*:——

தென்னிந்தியா ரெயில்பாரடி-பெண்ணேயிது
தெற்கேபோகும்நேரடி (தெ)

மன்னர்கள்தான் துதிக்கும் மதிருஸ்கருகாக
உன்னிதமாகவே யுகமையாயேர்ப்பட்ட (தெ)

மண்டலத்தோர்புகழும் மதிருஸ் எழும்பூரினில்
கண்டவர்வியப்படைக் கருதஙியமித்த (தெ)

சட்டமுடன்ஸ்டேஷன் பட்டணத்தோரர்போற்ற
திட்டமாகவே கட்டியிருக்கிற (தெ)

கண்ணாடிகதவுகள் கனத்த ஆபீசுகள்
விண்ணாடரும்மெச்ச விதமாகயேர்ப்பட்ட (தெ)

கைக்காட்டிமரங்களும் கனத்த ஆளுகளும்
பைகாட்சினேகர்முதல் பலருமிருக்கிற (தெ)

இஞ்சின்வண்டிமுதல் இணையில்லாவண்டிகள்
அஞ்சுதலில்லாமல் தங்கியிருக்கிற (தெ)

டிக்கட்டுகள்வாங்கி இக்கட்டில்லாமலே
பக்குவமாகவே தக்கபடிபோவோம் (தெ)

சைதாபேட்டைஸ்டேஷன் சார்ந்தபாங்கிலே
பயிலாகிறெயில்வண்டி பார்மீதிலேபோகும் (தெ)

பல்லாவரம்பாரு பக்கத்தில்வண்டலூரு
எல்லார்தங்குங்கூடு வாஞ்சேரியிதுபாரு (தெ)

அங்சமதுயீடேற ஆண்டவனைப்போற்றும்
சிங்கபெருமாள்கோயில் ஸ்டேஷனிதுபாரு (தெ)

தங்கயிளப்பாரி தாகவிடாய்தீர
செங்கற்பட்டுஸ்டேஷன் சிறப்பதாய்நாம்வந்தோம் ()

கோர்ட்டுமுதலான தூக்குமாங்களும்
மேட்டிமையாய்ச்செயில் தாட்டியாய்த்தோற்றது ()

பொன்விளைந்தகளத்தூரு புகலரியமதுராந்தம்
தன்மையுள்ளதாசில்தார நடத்துங்கச்சேரி (தெ)

அச்சரவாக்கமிது அடர்ந்துவரும்ரெயில்வந்டி
இச்சையுடனேமாற்றும் இணையில்லாஸ்டேஷனிது()

ஓலக்கூருதாண்டிநாம் ஒயிலானதிண்டிவனம்
கலக்கமிலாத்தாலுக்கா கட்டழகிவந்தோம்பார் (தெ)

புதுமைபுள்ளசத்திரத்தில் போஜனம்நாம்செய்து
இதமுடன்ரெயிலேறி இக்ஷணம்போகலாம் (தெ)

மானிலந்தான்புகழும் மயிலமெனுந்தலத்தில்
கானமயில்மீதேறும் கர்த்தனிருக்கிறார் (தெ)

கண்டுபணிந்தால் கர்மவினைகள்போகும்
வண்டுநிகர்விழியாளே மாங்குயில்மொழியாளே (தெ)

விக்கிரவாண்டி விழுப்புரந்தாண்டி
பக்கத்திலேபண்ருட்டி பண்யுள்ளஸ்டேஷனிது ()

நெல்லிக்குப்பமெனும் நேரானவூரிது
அல்லலகற்றுந்திருப் பாதிரிப்புலியூரிது (தெ)

பேடைமயிற்கண்ணோ பிரியாதசெந்தேனே
கூடலூர்ஸ்டேஷனைக்குறிப்பாகநீபாரு (தெ)

ஆலப்பாக்கமிது அடுத்தபரங்கிபேட்டை
கோலமுள்ளகாயலார் குடிகளிருக்கிறார் (தெ)

பார்தனிலுள்ளோர்கள் பத்தியாய்துதிக்கும்
சீருள்ளசிதம்பரத் தெரிசனஞ்செய்யடி (தெ)

நடராஜர்வீற்றிருக்கும் நலமானசிற்சபையை
மடமயிலேநீயும் மனதினிற்போற்றடி (தெ)

தொல்லைவினைகளைத் துரத்திகருவறுக்கும்
தில்லைமாகாளியின் தெரிசனஞ்செய்யடி (தெ

கனிவர்க்கங்களுண்டு காசாலட்டுமுண்டு
இனிமைப்பிரசாதங்களிருக்குமிடமுண்டு (தெ)
வல்வினையைத்தீர்க்கும் வயித்தீஸ்வரன்கோயின்
எல்லையைவிட்டுமகா வேகமாய்த்தான்போகும் (தெ)
மாயவரங்குத்தாலம் வழங்குநாசிங்கபேட்டை
தூயஸ்டேஷன்கள் தாண்டி துரிதமாகப்போகும் ()
திருவிடைமருதூர் தேன்பொழியுங்கும்பகோணம்
பருவுஞ்செந்தலைப்பேரு வந்தோமிப்போதடி (தெ)
பாவவிநாசனம் பகரும்ஐயம்பேட்டை
சோபமதைநீக்குஞ் சொருசள்ளதஞ்சாவூர் (தெ)
முப்பத்திரண்டும் முதன்மையாய்ச்செய்வித்த
தப்பில்லாபோஜராஜன் - தங்கியதஞ்சாவூர் (தெ)
சாலியமங்கலம் சார்ந்த அம்மாம்பேட்டை
நீடாமங்கலமிது நேர்ந்தகொரச்சேரி (தெ)
குளிக்கரைஸ்டேஷனிது குணமுள்ளதிருவாரூர்
களிக்கவேதியாகரைக் கண்டுதெரிசிப்போம் (தெ)
இத்தலத்தன்னிலே யிணையில்லாதேருகள்
மெத்தவுசிதமாக மேன்மையாய்த்தோற்றுவது (தெ)
அப்புறமிருக்கும் அடைவானஸ்டேஷன்களை
தப்பிதமில்லாமல் தன்மையுடன்சொல்வேன் (தெ)
கீவளூர்தானிது கிளர்சிக்கில்தானிது
மேவிநாகப்பட்டணம் மேன்மையுடன்வந்தோம் ()

திடமுள்ள திருச்சிறுப்பள்ளி ஸ்டேஷனிது
வடமேற்குரெயில்பாதை வந்துகலக்கும்பாரு (தெ)

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்ட
திட்டமுள்ளசொக்கநாதர் திருமதுரைதலமிது (தெ)

அங்கயற்கண்மீனாட்சி யம்மனிருக்கிற
சங்கைகளில்லாத சன்னிதியிற்கோறு (தெ)

திருப்பரங்குன்றம் திருமாநகரம்
விருப்பமுள்ள கள்ளுகுடி விருதுபட்டிஸ்டேஷன் (தெ)

துலுக்கபட்டிசாத்தூர் கோவில்பட்டிகுமாரபுரம்
தொடர்ந்துவரும்ஸ்டேஷன் துருசாய்போகும்இஞ்சின்

கண்டவர்வியப்படையுங்கடம்பூருஸ்டேஷனிது
அண்டையிலிருக்கு மணியாச்சிசத்திரமிது (தெ)

செந்தைகுண்டாதாண்டி சிறப்பானரெயில்வண்டி
விந்தைமிகும்திருநெல் வேலியிதோவந்தோம் (தெ)

ஏத்தும்திட்டப்பாறை நேத்தியாய்நாம்வந்து
தூத்துக்குடிதுலை தூரமேநாம்வந்தோம் (தெ)

தேசமெங்கும்புகழ் திருவண்ணமலையில்வாழ்
பாசமுடன்வீர பததிரனியம்பிய (தென்னிந்தியா)

தென்னிந்தியா ரெயில்வே சிந்து.

முற்றிற்று.